செ.வெ.எண்: 347/2021 நாள்: 17.08.2021

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டத்தில் செயல்பட்டு வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.முருகேஷ் இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு செய்தார்.**

------

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டத்தில், தூசி, வெம்பாக்கம், பெருங்கட்டூர் கிராமங்களில் செயல்பட்டு வரும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை இன்று (17.08.2021) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பா. முருகேஷ், இ.ஆ.ப. அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் **KMS-2021-22** ஆம் ஆண்டு சொர்ணவாரி பருவத்தில் விவசாயிகளின் நலன் கருதி உற்பத்தி செய்யப்படும் நெல்லினை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் வாயிலாக, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களான அணுக்குமலை, கொளத்தூர், மண்டகொளத்தூர், வண்ணாங்குளம், தச்சூர், எலத்தூர், வல்லம், மருதாடு, கொவளை, நல்லூர், நெடுங்குணம், நம்பேடு, மேல்சீசமங்கலம், பாராசூர், தவசிமேடு, நாவல்பாக்கம், புளியரம்பாக்கம், ஆக்கூர், நாட்டேரி, அரியூர், தூசி, வெம்பாக்கம், பெருங்கட்டூர் மற்றும் கூட்டுறவுத்துறையின் மூலமாக போளூர் கூட்டுறவு மார்கெட்டிங் கமிட்டி மற்றும் ஆரணி கூட்டுறவு மார்கெட்டிங் கமிட்டி ஆகிய 25 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 16.08.2021 அன்று முதல் திறந்து, நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது.

இதனை தொடர்ந்து, வெம்பாக்கம் வட்டாரத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை ஆய்வு செய்து, விவசாயிகள் https://tvmdpc.com என்ற இணைய தளத்தில் பதிவு செய்து, டோக்கன் பெற்று அதனுடன் அனுமதி சீட்டு படிவம் (Permit pass) பதிவிறக்கம் (Download) செய்து பூர்த்தி செய்த படிவத்தில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவி வேளாண்மை அலுவலரின் கையொப்பம் மற்றும் முத்திரை பெற்று அத்துடன் சிட்டா அடங்கல் தற்போது பெறப்பட்ட ஆதார் நகல் / வங்கி கணக்கு புத்தக நகல் இவற்றுடன் DPC-க்கு நெல் கொண்டு வந்தால் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்படும். ஒரு விவசாயிக்கு ஒரு டோக்கன் மட்டுமே வழங்க வேண்டும். மேலும், இணைய வழியில் முன்பதிவு செய்து வழங்கப்பட்ட தேதியில் மட்டுமே விவசாயிகள் வர வேண்டும். தினந்தோறும் பெறப்பட்ட நெல் மூட்டைகளை காலை 08.00 மணி முதல் 04.00 மணிக்குள் பணியினை முடித்து, நெல்மூட்டைகளை நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு (DPC) கிடங்கிற்கு எடுத்து செல்ல வேண்டுமெனவும், சேமிப்பு நிலையத்தில் உள்ள அனைத்து நெல் மூட்டைகளை பாதுகாப்பாக வைக்க வேண்டுமெனவும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், தமிழக அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சன்னக ரக நெல் குவிண்டல் ஒன்றுக்கு ரூ.1,958/- வீதமும், பொது ரக நெல் குவிண்டாலுக்கு ரூ.1,918/- வீதமும் கொள்முதல் செய்யப்படுகிறது. விவசாயிகளின் நலனை கருத்திற்கொண்டு, விவசாயிகளிடமிருந்து கொள்முதல் நெல்லிற்கு உண்டான தொகையினை அவர்களது வங்கி கணக்கில் பண பரிவர்த்தன முறை (ECS) முறையில் செலுத்தப்படும்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் திரு. கோபிநாத், செய்யாறு வருவாய் கோட்ட அலுவலர் திரு.விஜயராஜ், அரசு அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் உடன் இருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை.**